DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 85-2022**

**Deposition of Witness for Prosecution : P.W. 12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். சங்கர் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 04.08.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் கோவை ESI அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்ட மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.07.2021 நான் நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்ட மருத்துவத்துறையில் போதகராக பணியில் இருந்தபோது கீழையூர் காவல் நிலைய குற்ற எண் 455/2021 வழக்கில் இறந்துபோன 29 வயது மதிக்கத்தக்க வெற்றிச்செல்வன் என்பவரை பிரேதத்தின் மீதான பிரேத பரிசோதனை விண்ணப்ப கடிதத்தை சிறப்பு உதவி ஆய்வாளர் சிவானந்தம் அவர்களின் மதியம் 1.50 மணியளவில் பெற்றுக்கொண்டேன். பிரேத அங்க மச்சம் அடையாளங்களை சரிபார்த்து பிரேத பரிசோதனையை அன்றைய தினமே மதியம் 2.30 மணியளவில் தொடங்கினேன். அணிந்திருந்த சட்டையின் காலர் பகுதியில் இரத்தக்கறைகள் இருந்தது. பிரேதம் சாதாரண உடல் கட்டமைப்புடனும் மரண விறைப்பு தன்மையுடனும் இருந்தது. மூக்கிலிருந்து இளம் சிவப்பு நிற நுரை வெளியேறிய நிலையில் இருந்தது.

இறப்பு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு:

1. Y–வடிவிலான 7x1 cm அளவிலான கிழிந்த காயம் தலையின் உச்சியில் இருந்தது.

2. 2x2 cm அளவிலான கருநீல நிற கன்றிய காயம் நெற்றியின் வலது பக்கத்தில் காணப்பட்டது.

3. 2x1 cm அளவிலான கருநீல நிற சிராய்ப்பு காயம் மூக்கின் மேல் இருந்தது. மூக்கின் எலும்பு முறிவுடன் காணப்பட்டது.

4. கருஞ்சிவப்பு நிற சீராய்ப்பு காயம் கன்றிய காயம் இடது முன்னங்கையில் நடுப்பகுதியில் காணப்பட்டது. மேலும் அதன் அடியில் அல்னா எலும்பு உடைந்த நிலையில் இருந்தது. அதனை சுற்றிலும் இரத்தம் கசிந்து காணப்பட்டது.

5. 1x0.1x0.1cm அளவிலான கிழிந்த காயம் இடது கை முட்டியில் காணப்பட்டது.

தலை பகுதியை கூராய்வு செய்து பார்க்கையில் இடது பக்க நடு மண்டையில் 8x3 cm அளவிலான கருஞ்சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது. மண்டை எலும்புகள் சீராக இருந்தது. மூளையின் இடது பக்கத்தில் இரத்த காயம் இருந்தது. மூளையின் இரண்டு பக்கத்திலும் அரைக்கானாய்டு மேட்டர் என்கின்ற மூளை தோலின் அடியில் இரத்தம் கசிந்து காணப்பட்டது.

நெஞ்சு பகுதியை கூராய்வு செய்து பார்க்கையில் நெஞ்சு எலும்புகள் சீராக இருந்தது. நுரையீரல்கள் விரிவடைந்து இரத்தம் தோய்ந்து காணப்பட்டது. அதன் உள் பகுதியில் நுரை கலந்து சுரப்பு இருந்தது. இருதயம் சீராக இருந்தது.

வயிற்று பகுதியை கூராய்வு செய்து பார்க்கையில், இரைப்பையில் 100ml அளவில் இளஞ்சிவப்பு நிற திரவம் இருந்தது. குறிப்பிடத்தக்க வாடை எதுவும் இல்லை. இதர உள்ளுறுப்புகள் சீரான நிலையில் இருந்தன. அவற்றை சேகரித்து இரசாயண பகுப்பாய்விற்காக அனுப்பினேன்.

கழுத்து பகுதியை கூராய்வு செய்து பார்க்கையில், எலும்புகள் மற்றும் இதர உறுப்புகள் சீராக இருந்தது.

முதுகு தண்டுவடம் மற்றும் இடுப்பு எலும்புகள் சீராக இருந்தது.

பிரேத பரிசோதனையை அன்றைய தினமே மாலை 4.00 மணிக்கு முடித்தேன்.

பிரேதமானவர், தலையில் ஏற்பட்ட காயங்கள் தண்ணீரில் மூழ்கி ஏற்பட்ட மூச்சு திணறலால் இறந்திருக்க கூடும். மேலும் பிரேத பரிசோதனைக்கு 12 முதல் 24 மணி நேரத்திற்குள் இறப்பு நேர்ந்திருக்க கூடும் என்று கருத்து கூறி அறிக்கை வழங்கினேன்.

என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கட்டையால் அடித்தால் இறப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விசரா அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

படகும், படகும் மோதி கொண்டு விபத்து ஏற்பட்டு அதன் மூலமாக காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

(சாட்சியம் காணொலி மூலமாக பதிவு செய்யப்பட்டது.)